1967 ஜூன் 22]

இப்படித் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவே மாட்டார்கள். அரசியலை சரியாக ஜீரணிக்க முடியாதவர்கள், தங்கள் தங்கள் அரசியல் கட்சிகளை சரியான முறையில் வளர்த்துக்கொள்ள முடியாதவர்கள், பொறுப்பு இல்லாதவர்கள், இப்படிப்பட்டவர்கள் தான் கலவரங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள். ஆகவே, அந்த வகையில் அவர்களுக்கு அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. மேலும் சட்டம்தான் ஆளும் என்பதை ஒப்புக் கொண்டு நாம் ஜனநாயகத்தை நடத்திக் கொண்டிருக்கிற நேரத் தில் அரசியல் காரணங்களுக்காக ஏற்படுகிற குற்றங்கள், வேறு காரணங்களுக்காக ஏற்படுகிற குற்றங்கள் என்றெல்லாம் நாம் பாகு பாடு படுத்துவதற்கில்லை. என்னைக் கேட்டால் மற்றக் குற்றங் களுக்குக் கூட, அரசியல் அல்லாத மற்றக் குற்றங்களுக்கு வேண்டு மானால் கொஞ்சம் சலுகை காட்டலாம். ஏதோ ஆசை காரணமாக பாசம் காரணமாக அல்லது லாபம் காரணமாக அப்படிப்பட்ட கலவரங்கள் எல்லாம் நடக்கின்றன. இவைகள், அரசியல் தொடர் பான கலவரங்கள், முடிந்த பிறகு ஏன் செய்தோம் என்று செய்த வர்களே வருத்தப்படக் கூடிய வகையானவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு தொகுதியைப் பற்றிய கேள்வி. இதன்மீது போதிய துணைக் கேள்விகள் கேட்கப்பட்டு விட்டன என்று கருதுகிறேன். ஆகவே அடுத்தபடியாக, குறுகிய காலக் கேள்வி எண் 4, திரு. ஆசைத்தம்பி அவர்கள்.

2. ஒழுங்குப் பிரச்சினை.

இலங்கையில் தமிழக அரசுபற்றிச் செய்யப்படும் தவறான பிரச்சாரம் பற்றிய வினாவை அனுமதித்தல்

TTIRU K. VINAYAKAM: Sir, I rise on a point of order. The point of order is this. This question should not be either put or answered on the floor of this House, because its subject-matter relates to international relations between one country and another. Our country is having very good relations with Ceylon.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் குறிப்பிடுவது இப்போது விடை சொல்லப் போகிற கேள்வியைப் பற்றியது. விடை என்ன என்பதைத் தெரிந்து கொண்டு உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புங்கள்.

THIRU K. VINAYAKAM: My point is that the question should not be answered and the subject should not be discussed.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பதில் சொல்லுகிறார்கள், பதில் சொல்லுகிறார்களா, சொல்ல மாட்டேன் என்று சொல்லு கிறார்களா என்று தெரிந்து கொண்ட பின் உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புங்கள்.

THIRU K. VINAYAKAM: Let the Hon. Speaker please listen to me. The Party in power has got about 25 Members in Parliament and they can raise this point in Parliament.

Really speaking this subject should be raised in the Parliament and not in the Assembly.

THIRU RAMA. ARANGANNAL: I want to make one submission.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சப்மிஷன் என்று ஒன்றும் கிடையாது.

திரு. இராம அரங்கண்ணல்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்தக் கேள்வி சபாநாயகர் அவர்கள் அனுமதித்து சட்டசபைக்கு வந்திருக்கிறது. நண்பர் திரு. வினாயகம் அவர்கள் கிளப்புகிற இந்தப் பிரச்சினை சபாநாயகர் அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று கிளப்புகிற பிரச்னைக்கு ஒப்பாகும். ஏனெனில் இந்தக் கேள்வி அனுப்பப்பட்டு தாங்கள் அனுமதித்த பிறகு இங்கு சட்ட சபைக்கு வந்திருக்கிறது. ஆகையால், அவர் இந்த ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்புவது ஒழுங்கல்ல என்று நான் கருதுகிறேன். இதுகுறித்து தங்கள் தீர்ப்பு வேண்டும்.

திரு. கே. பி. எஸ். மணி: பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்தச் சபைக்கு ஒரு ஒழுங்கு விதிக்கப்பட்டிருக்கிறது தங்கள் தலைமையில். சபாநாயகர் அவர்கள் பேசும்போது இந்த ஒழுங்கை மீறி அங்கத்தினர்கள் எழுந்து நிற்பதும், சபையில் ஒருவருக்கொருவர் விவாதத்தை நேரடியாக நடத்திக் கொள்ளுவதுமாக இருக்கிற முறை இந்தச் சபையின் கௌரவத்தைக் குறைக்கிறது. அதற்குப் பரிகாரம் தேட தங்களை வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று உறுப்பினர்களும் கூறியதுபற்றி நான் தெரிவிப்பது, ஏதோ நான் அவர்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தேனே தவிர, பேசிய அத்தனையும் விதிகளுக்கு முரண் என்று தெரிந்தே கேட்டுக் கொண்டிருந்தேன் என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பேரவையின் 40-வது விதியைப் படிக்கிறேன்—

No discusisons shall be permitted at question time in respect of any question.

அதாவது கேள்வி நேரத்தில் கேள்விகள் பற்றிய எந்தவிதமான விவாதமும் கூடாது. ஆகையால் அருள்கூர்ந்து அந்த விதிப்படி கேள்வி நேரத்தில் விவாதங்களை எழுப்ப வேண்டாமென்று கேட்டுக் கொண்டு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை விடை கூறும் படி கேட்டுக்கொள்கிறேன்.

1. வினாக்கள்-விடைகள் (தொடர்ச்சி)

தமிழக அரசு பற்றி தவறான பிரச்சாரம்

* குறுகிய கால வினா எண் 4. **திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக தி. மு. கழக அரசுபற்றி திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா கட்சியினர் தவறான பிரச்சாரம் செய்து வருவது தமிழக அரசுக்குத் தெரியுமா?